இயேசு கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார்?

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

1. உங்களை நேசிக்கிறார்.

2. உங்கள் பாவங்களுக்காக அவர் சிலுவையில் பாடுபட்டார்.

3. உங்களுக்குப் பதிலாக அவர் இரத்தம் சிந்தி மரித்தார்.

4. மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினார்.

5. உங்கள் பாவங்களை அவர் மன்னிக்கிறவர்.

6. பாவப் பழக்கங்களிலிருந்து உங்களுக்கு விடுதலை தருகிறார்.

இயேசு கிறிஸ்து

- இயேசு கிறிஸ்து தெய்வத்தின் ஒரே அவதாரம்!
- இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைச் சுருக்கம்
- இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களிலிருந்து உங்களை இரட்சிக்கிறார்!
- இயேசு கிறிஸ்து உங்கள் வியாதிகளை சுகமாக்க வல்லவர்!
- இயேசு கிறிஸ்து பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்க வல்லவர்!
- இயேசு கிறிஸ்து இன்றும் அற்புதங்களைச் செய்கிறார்!
- இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஏன் அறிவிக்கிறார்கள்?
- இயேசு கிறிஸ்து போதித்தது என்ன?
- இயேசு கிறிஸ்துவை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்!

இயேசு கிறிஸ்து

இவ்வுலகில் எல்லோரும் அறிந்திருக்க வேண்டியவர் ஒருவர் உண்டென்றால் அவர் இயேசு கிறிஸ்து!

இவ்வுலக மக்கள் எம்மதத்தவராயினும், எப்படிப்பட்டவர்களாயினும் அவர்களை உருக்கமாய் நேசிக்கக்கூடிய ஒருவர் உண்டென்றால் அவர் இயேசு கிறிஸ்து!

இன்றைய உலகில் வாழும் மக்களின்
எல்லாத் தேவைகளையும் நிறைவு
படுத்தக்கூடிய, திருப்தி
செய்யக்கூடிய ஒருவர்
உண்டென்றால் அவர்
இயேசு கிறிஸ்து!

இயேசு சொன்னார் :

*நானே வழியும் சத்தியமும்
ஜீவனுமாயிருக்கிறேன்;
என்னாலேயல்லாமல் ஒருவனும்
பிதாவினிடத்தில் வரான்.*

யோவான் 14 : 6

மக்களின் சரீர வாழ்க்கையின் முடிவாகிய மரணத்திற்குப் பின் உள்ள நித்திய காலத்தில் அவர்கள் மோட்சத்தில் பரம சந்தோஷத்துடன் வாழ வழிவகுத்த ஒரே ஒருவர் உண்டென்றால் அவர் இயேசு கிறிஸ்து!

இயேசு கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் ஒருவேளை கேள்விப்பட்டிருக்கலாம். ஓரளவிற்கு அவரைப் பற்றி தெரிந்திருக்கலாம். பலரும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி பலவாறாக நினைக்கிறார்கள்.

'இயேசு' என்ற வார்த்தையின் பொருள் 'அவர் தமது மக்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிக்கிறவர் (காப்பாற்றுகிறவர்)' என்பதாகும். (பைபிள்)

'கிறிஸ்து'என்றால் மேசியா, அதாவது 'அபிஷேகம் பண்ணப்பட்ட இராஜா'என்று பொருளாகும்.

இயேசு கிறிஸ்து

- அவர் யார்?
- அவர் எப்படிப்பட்டவர்?
- அவர் ஏன் உலகத்திற்கு வந்தார்?
- அவர் உங்களுக்காக என்ன செய்திருக்கிறார்?
- உங்கள் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து என்ன செய்ய விரும்புகிறார்?
- அவரைப் பற்றி நீங்கள் ஏன் அறிந்து கொள்ள வேண்டும்?
- கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவிப்பதன் காரணம் என்ன? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நீங்கள் பதில்களை தெரிந்து கொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும். இச்சிறு புத்தகத்தை கருத்துடன் வாசிப்பீர்களா? தயவு செய்து கவனமாக படித்துப்பாருங்கள்.

இயேசு கிறிஸ்து
தெய்வத்தின் ஒரே அவதாரம்!

இயேசு நாதர் உலகத்தில் தோன்றிய மகாத்மாக்களில் ஒருவர் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசு மகாத்மாக்களிலும் மேலானவர். அவர் தெய்வத்தின் ஒரே அவதாரம்!

கடவுள் மனிதருக்குத் தன்னை வெளிப்படுத்த மனித உருவெடுப்பதை 'அவதாரம்' என்று சொல்லுவார்கள். மனிதனுக்குள்ளே கடவுளை பக்தியுடன் ஆராதிக்க வேண்டும். அவரை அறிந்து கொள்ள வேண்டும் என்ற தீராத தாகமுண்டு. இத்தேவையை நிறைவு படுத்தத்தான் இயேசு கிறிஸ்து மனிதனாகப் பிறந்தார்.

பாவத்தின் காரணமாக கடவுளுடைய சாயலையும், கடவுளோடு கொண்டிருந்த உறவையும் இழந்த நிலையிலிருக்கும் மனுக்குலத்தை ஈடேற்றவும் அவர்களுக்கு நல்வாழ்வைக் கொடுக்கவும் கடவுள் தன்னை மனிதனாக வெளிப்படுத்தினார். பலவிதங்களில், பலமுறைகளில், பலர் மூலமாகக் கடவுள் அவதாரம் எடுக்காமல் ஒரே ஒருமுறை இயேசு கிறிஸ்துவாக அவதாரம் எடுத்தார்.



இயேசு கிறிஸ்து

2000 ஆண்டுகளுக்கு முன்னால் இப்பொழுது 'இஸ்ரேல்' என்றழைக்கப்படும் பாலஸ்தீனா நாட்டில் ஒரு கன்னியின் வயிற்றில் பிறந்த இயேசு கிறிஸ்து தான் தெய்வத்தின் ஒரே அவதாரம் ஆவார். மனிதனின் விழுந்துபோன பாவ நிலைமையிலிருந்து அவனை விடுவித்து, தூக்கி எடுத்து, உயர்த்தி, அவனது வாழ்வை நிறைவுபடுத்த வந்த ஒரே தெய்வ அவதாரம் இயேசு கிறிஸ்து. 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்' என்று பைபிளில் எழுதப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்து

- நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்!
- பரத்திலிருந்து வந்தார்!
- பாவிகளை நேசிக்கிறார்! பாவத்தை வெறுக்கிறார்!
- பாவ பழக்கங்களிலிருந்து விடுதலை தருகிறார்!
- பரிசுத்தத்தை விரும்புகிறார்!
- உங்கள் பாவங்களுக்காக அவர் சிலுவை மரத்தில் இரத்தம் சிந்தி, பாடுபட்டார்!
- உங்களுக்குப் பதிலாக அவர் மரித்தார்!



இயேசு கிறிஸ்து வாழ்க்கைச் சுருக்கம்!

இயேசு கிறிஸ்து முப்பத்து மூன்றரை ஆண்டு காலம் இவ்வுலகில் வாழ்ந்தார். அவர் முப்பது வயதாயிருக்கும்போது மக்களுக்கு நற்பணிகளைச் செய்யவும், தெய்வீகப் போதனைகளை எடுத்துச் சொல்லவும் ஆரம்பித்தார். பாலஸ்தீன நாட்டின் வடபகுதியான கலிலேயா என்ற பகுதியில் ஊழியத்தை ஆரம்பித்தார். தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பிரசங்கிக்கவும், நோயுற்றோருக்கு தெய்வீக சுகம் கொடுக்கவும், பிசாசின் பிடிகளில் இருந்தோரை விடுவிக்கவும், 12 சீடர்களைத் தெரிந்துகொண்டு அவர்களைப் பயிற்றுவித்தார். இயேசு கிறிஸ்துவின் ஊழியகாலமெல்லாம் அவர்கள் அவருடனே கூடச் சென்றார்கள்.

இயேசு கிறிஸ்து சிறந்த தெய்வீகப் போதகர். மக்களின் ஆன்மீக வாழ்க்கைக் கான மேலான சத்தியங்களை தெளிவாக, எளிய முறையில் போதித்தார். அவர் சொன்ன 36 உவமைகள் பைபிளில் 'புதிய ஏற்பாடு' என்ற பிரிவில் சுவிசேஷங்களில் இடம் பெற்றுள்ளன.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அற்புத மூர்த்தி. இயற்கைக்கும் அப்பாற்பட்ட பல அற்புத செயல்களை அவர் செய்தார். 30க்கும் மேற்பட்ட அவரது அற்புத செயல்கள் சுவிசேஷங் களில் எழுதப்பட்டுள்ளன. இயேசு கிறிஸ்து மனித உரு எடுத்ததின் மேலான நோக்கம் மக்களது பாவங்களுக்கான பிராயச்சித்தம் செய்வதற்காகத் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசு கிறிஸ்து தமது உலக வாழ்வின் கடைசி நாட்களை பாலஸ்தீனத்தின் தலை நகராகிய எருசலேம் பட்டணத்தில் செலவிட்டார். அவரது இனத்தவரான யூதமக்கள் அவரைப் புரிந்து கொள்ளவில்லை. அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவரை முற்றிலுமாக வெறுத்தனர். அவர் கொலை செய்யப்படுவதற்கு அபாண்டமாக பழிகளைச் சுமத்தினர். 'அவனைச் சிலுவையில் அறையும்' என்று தேசத்தின் அதிபதியான பிலாத்து என்பவன் முன் ஆவேசக் குரல் எழுப்பினர். இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டுமென்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்து

கெத்செமனே என்ற தோட்டத்தில் உருக்கமாக அவர் ஜெபித்துக்கொண்டிருந்தபோது அவரை எதிர்த்தவர்களால் இயேசு கிறிஸ்து கைதாக்கப்பட்டார். மதத்தலைவர்கள் முன்னிலையிலும், தேசத் தலைவர்கள் முன்னிலையிலும் விசாரணை செய்யப்பட்டார். ரோம நாட்டு போர்ச் சேவகர்கள் அவரை கொடுமையாக துன்புறுத்தினர். முட்களினால் கிரீடம் ஒன்றைச் செய்து அவர் தலையின் மேல் வைத்து அழுத்தினர்.





பாரமான சிலுவை மரத்தை சுமந்தவராய் இயேசு கிறிஸ்து எருசலேம் தெருக்களின் வழியாக'கொல்கொதா' என்றழைக்கப்படும் கல்வாரி மலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு இரண்டு கொடியவர்களின் மத்தியில் சிலுவை மரத்தில் அறையப்பட்டார். கைகளிலும், கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டவராய் சிலுவை மரத்தில் இயேசு தொங்கினார். அந்தச் சமயத்திலும் தன்னை துன்புறுத்தினவர்களுக்காக மன்றாடினார். ஒரு சில மணிநேரங்களில் 'முடிந்தது' என்று வெற்றி முழக்கமிட்டு உயிர்விட்டார்.அவரது விலா ஈட்டியினால் குத்தப்பட்டது.

இயேசு கிறிஸ்து

இயேசு மரித்தபோது பூமி அதிர்ந்தது. இருள் சூழ்ந்தது. அப்பொழுதுதான் அவரது தெய்வீகத் தன்மை பலருக்கும் விளங்கினது. இயேசுவின் சரீரம் குகை போன்ற ஒரு கல்லறையில் வைக்கப்பட்டு, அக்கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டது. முத்திரை செய்யப்பட்டது. போர்ச் சேவகர்கள் காவல் காத்தனர். மூன்றாம் நாள் இயேசுகிறிஸ்து உயிருடன் எழும்பினார்.



மற்ற மகாத்மாக்களைப் போல மரணத்தோடு இயேசு கிறிஸ்துவின் சரித்திரம் முடிந்து விடவில்லை. இயேசு கிறிஸ்து முன்னமே தாம் சொல்லியிருந்த பிரகாரமாக மூன்றாம் நாள் மரணத்தை வென்றவராக உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த பின்னர் 40 நாட்கள் அவர் தம்முடைய சீடர்களுடன் இருந்தார். கடைசியாக சில முக்கியமான கட்டளைகளை அவர் தம் சீடர்களுக்கு கொடுத்து விட்டு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் விண்உலகிற்குச் சென்றார்.

இயேசு கிறிஸ்து

இயேசு உயிர்த்தெழுந்து 40 நாட்களுக்குப் பின்னர் எப்படி எழுந்தருளிச் சென்றாரோ அந்த விதமாக யாவரும் பார்க்கும் வகையில் மீண்டும் இந்த உலகத்திற்கு திரும்பி வருவார். மிக விரைவில் அவர் இந்த உலகத்திற்கு மீண்டும் வரவிருக்கிறார்.

இயேசு கிறிஸ்து சரித்திரப் புகழ் பெற்று தலைசிறந்து விளங்கினவர் மட்டுமல்ல, அவர் தன்னிகரற்ற தேவகுமாரன். மனிதர் பிறந்து வாழ்ந்து மரிப்பார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து மரிப்பதற்காகப் பிறந்தார். மரித்தவர் உயிரோடு எழுந்தார்.

உயிரோடு எழுந்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே
உம்மை ஆராதனை செய்கிறோம்

அல்லேலூயா ஓசன்னா (8)

அவர் மீது நம்பிக்கை கொண்டு, அவரை உறுதியாகப் பற்றிக் கொள்ளுகிறவர்கள் உள்ளத்திலேயே அரசாட்சி செய்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களுக்கு நல்வாழ்வையும், நித்திய ஜீவனையும் அளிக்கிறார்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை...

☞ நம்பினால் - ஆசீர்வாதம் பெறுவீர்கள்!

☞ ஏற்றுக்கொண்டால் சமாதானம், சந்தோஷம் நன்மைகளினால் நிரப்பப் படுவீர்கள்.

☞ பின்பற்றினால் இவ்வுலகிலும், மறு உலகிலும் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.

இயேசு கிறிஸ்து

பாவங்களிலிருந்து உங்களை இரட்சிக்கிறார்! பொதுவாக மக்கள் 'பாவம்' என்பது பற்றி பேச விரும்புவதில்லை. ஆனால் பாவம் என்ற முக்கியமான அடிப்படைப் பிரச்சனைக்கு தீர்வு காணாமல் இவ்வுலக வாழ்க்கையை முடிக்கும் மனிதனின் நித்தியம் நரகத்தில் செலவிடப்படும் என்பது தவிர்க்க முடியாத, தப்ப முடியாத ஓர் உண்மையாகும். பாவம் செய்யும் சுபாவம் மனிதனுக்குள் இருப்பதால் அவன் பாவம் செய்கிறான். மனிதன் பாவமான செயல்களைச் செய்வதனால் அவனை 'பாவி' என்றழைப்பதைக் காட்டிலும் அவன் பாவியாக அதாவது பாவம் செய்யும் சுபாவத்தை உடையவனாக இருப்பதினால் 'அவன் பாவம் செய்கிறான்' என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

பாவமான செயல்களைச் செய்வதினால் மனிதனுடைய மனசாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. பாவம் செய்ய வேண்டாமென்று அவன் விரும்பினாலும் பாவமான பழக்கங்களின் பிடியில் இருந்து தப்பமுடியாமல் தவித்து அல்லற்படுகிறான்.

பாவம், அவனை மட்டுமல்ல அவனைச் சுற்றிலும் வாழ்பவர்களையும் பாதிக்கிறது. பாவம் செய்து கொண்டே வாழ்ந்து, இரட்சிக்கப்படாமல் அவன் மரிப்பானாகில் நித்திய ஆக்கினையாகிய நரகம் அவனுக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களை பாவத்தின் தீர்ப்பாகிய நரகம் என்ற நித்திய ஆக்கினையி லிருந்து இரட்சிக்க அதாவது விடுதலையாக்க இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார்.

மனிதன் பாவத்தன்மையுடையவனாய் தெய்வத்தின் மகிமையை இழந்தவனாய் இருக்கிறான். பிறவி வியாதியைப் போல் அவனுக்குள் இருக்கும் பாவம் பயங்கரமான ஆன்மீக நோயாக இருக்கிறது. வியாதிப்பட்ட ஒருவன் வியாதியின் விளைவாகிய மரணத்தினின்று காப்பாற்றப்பட வேண்டும். வியாதியின் கோரப் பிடியிலிருந்து விடுதலையாக்கப்பட வேண்டும். இப்படி காப்பாற்றப்பட்டு விடுதலையாக்கப் படுவதைப் போல ஆன்மீக வியாதியாகிய பாவத்தின் தண்டனையிலிருந்தும், பாவத்தின் வல்லமையில் இருந்தும் காப்பாற்றப்பட்டு விடுதலையாக்கப்படுவது 'இரட்சிப்பு' என்று அழைக்கப்படுகிறது.

இயேசு என்றால் 'தமது மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்' என்று பொருள். சிலுவை மரத்தில் மனிதனுடைய பாவத்திற்கு நிவாரணம் அல்லது பிராயச்சித்தம் செய்யும் வகையில் மரித்த இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, உங்களைச் சுத்தமாக்க வல்லமையுள்ள தாயிருக்கிறது.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது பாவத்திற்குரிய தண்டனை யிலிருந்து உங்களுக்கு விடுதலையையும் பாவத்தின் வல்லமைக்கு மேலான வெற்றியையும் அவர் தருகிறார்.

இயேசு கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

நீங்கள் மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.

இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்.

'பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்'.

அப்போஸ்தலர் 4 : 12 *மாற்கு 1 : 15* அப்போஸ்தலர் 16 : 31

லூக்கா 19:10 I *தீமோத்தேயு 1:15 மத்தேயு 9:13*

இயேசு கிறிஸ்து
உங்கள் வியாதிகளை சுகமாக்க வல்லவர்!

பலவிதமான வியாதிகளினால் இன்று மக்கள் தவிக்கிறார்கள். 2000 வருடங்களுக்கு முன் வாழ்ந்த இயேசு கிறிஸ்து குருடருக்குப் பார்வை அளித்தார், செவிடரைக் கேட்கச்செய்தார், ஊமையரைப் பேசவைத்தார். ஊன முற்றோரைக் குணமாக்கினார். மரித்தோரை உயிருடன் எழுப்பினார். தவிக்கும் திரள் கூட்டமான மக்களைக் கண்டு மனதுருகின இயேசு கிறிஸ்து அவர்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் நீக்கி அவர்களைச் சுகமாக்கினார். 38 வருடங்களாய் வியாதியினால் வேதனைப்பட்ட ஒரு மனிதனை இயேசு தேடிச்சென்று குணமாக்கினார்.

சுகப்படுத்தும் வல்லமை அவரிடமிருந்து புறப்பட்டுச் சென்றது. அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டவர்கள் யாவரும் சுகமடைந்தார்கள். அவருக்கு முன்பாக இருந்தவன் மட்டுமல்ல, தூர இடத்திலிருந்தவனும் சுகம் பெற்றான்.

இயேசு கிறிஸ்து அருளும் அற்புத சுகம் உடனடியானது மட்டுமல்ல. அது முழுமையானதாகவும், நிரந்தரமானதாகவும் இருக்கிறது.

அதே இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார்! இயேசு உங்கள் வியாதிகளைச் சுகமாக்க வல்லவராக இருக்கிறார்! திடீரென்று ஏற்படும் நோயோ, தீராது வாட்டும் நோயோ எதுவானாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரைச் சொல்லி வேண்டிக்கொள்ளுங்கள். அப்பொழுது அற்புதமாகவும் நிரந்தரமாகவும் அவைகள் உங்களை விட்டு நீங்கிப் போகும்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை மனப்பூர்வமாக விசுவாசித்தால் அவருடைய சுகமாக்கும் தெய்வீக வல்லமையினால் ஆச்சரியமான விடுதலையையும், அற்புத சுகத்தையும் பெறுவீர்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வியாதிகளை குணமாக்குகிறவர். ‘ஆண்டவராகிய இயேசுவே என் நோயைக் குணமாக்கும்’ என்று மனப்பூர்வமான நம்பிக்கையுடன் உருக்கமாக ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக்கேட்டு உங்களை சுகப்படுத்துவார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களிடம் அல்லது கிறிஸ்தவ ஊழியக்காரர்களிடம் உங்களுக்காக ஜெபிக்கச் சொல்லுங்கள்.

இயேசு கிறிஸ்து
பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்க வல்லவர்!

மனிதனுடைய பிரச்சனைகளுக்கு பல காரணங்கள் உண்டு. அவைகளில் ஒன்று பிசாசின் கிரியைகள் ஆகும். அசுத்த ஆவிகள், தீய சக்தி, பிசாசு, காத்து, கருப்பு என்று பலவாறு அழைக்கப்படும் பொல்லாத ஆவி களினால் மக்கள் சொல்லொண்ணா துன்பத்திற்கும், தொல்லைகளுக்கும் உள்ளாகின்றனர்.

சாத்தான் அநேகரைத் தீராத வியாதிகளினாலும், பெலவீனங்களினாலும், மனசமாதானமில்லாமையினாலும், பாவப் பழக்கங்களினாலும், புத்திக் கோளாறினாலும், குடும்ப சண்டை சச்சரவுகளினாலும், கட்டிவைத்திருக்கிறான்.

இந்த பிசாசின் கட்டுகளை அவிழ்க்கவும், இப்படி கிரியை செய்யும் அசுத்த ஆவிகளைக் கட்டவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. ‘வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது’ என்று அவர் கூறினார்.

அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் எப்பொழுதும் இரவும் பகலும் மலைகளிலும், கல்லறைகளிலும் இருந்து கூக்குரலிட்டுக் கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். இயேசு கிறிஸ்து அவனைத் தேடிச்சென்று, அற்புதமாக அவனை விடுதலை யாக்கினார். ஊமையும் செவிடுமான ஆவியை ஒரு வாலிபனிடமிருந்து வெளி யேறக் கட்டளை கொடுத்து வெளி யேற்றினார்.

கானானியப் பெண் ஒருத்தியின் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்பட்டாள். அவள் விசுவாசத்தோடு விடாப்பிடியாய் இயேசுவை வேண்டிக்கொண்டபோது, 'பெண்ணே உன் விசுவாசம் பெரியது. நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது' என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.

பிரச்சனை, போராட்டம் நிறைந்த சூழ்நிலையில் 'ஆண்டவராகிய இயேசுவே, என்னை விடுதலையாக்கும், எனக்கு வெற்றி தாரும்' என்று ஜெபியுங்கள். கர்த்தர் உங்களுக்கு விடுதலையும், வெற்றியும் தருவார்.

ஒரு சமயம் ஒருவன் ஊமையான ஆவி பிடித்த தன் மகனை இயேசுவிடம் கொண்டு வந்தான். அந்த ஆவி அவனை அலைக்கழிக்கும் போதெல்லாம் அவனைத் தீயிலும் தண்ணீரிலும் தள்ளியது. அடிக்கடி பல்லைக்கடித்து நுரை தள்ளிக் கொண்டிருந்த தன் மகன் விடுதலை பெற அவன் ஆண்டவரிடம் வேண்டினான். அப்பொழுது அவர் அந்த ஆவியை அதட்டி வெளியேற்றினார். அன்றிலிருந்து அவன் மகன் விடுதலையும், சுகமும் பெற்றான். இப்படி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் தேவனுடைய விரலினால் துரத்தினார். அதிகாரத்தோடு அவர் அவைகளைக் கடிந்துகொண்டு அதட்டி, வெளியேற்றினார்.

பிசாசின் வல்லமையினால் மேற்கொள்ளப்பட்ட யாவரையும் விடுதலையாக்கி அவர் குணமாக்கினார். இயேசு என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் பிசாசின் சேனைகள், அசுத்த ஆவிகள் நடுங்கி அஞ்சி ஓடுகின்றன. இன்றைக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட விடுதலையை உங்களுக்கு கொடுக்க முடியும்.



இயேசு கிறிஸ்து
இன்றும் அற்புதங்களைச் செய்கிறார்!

கடவுளின் செயல்கள் மனிதனுடைய எண்ணங்களுக்கும், கற்பனைகளுக்கும் மேலானவைகளானதால் அவன் கண்களுக்கு அவைகள் ஆச்சரியமானவைகளாக இருக்கின்றன. இறைவனுடைய படைப்பின் மாட்சிமை தான் என்னே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்கிறவர்.

ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். அவரது திருப்பெயர்களில் ஒன்று 'அதிசயமானவர்' என்பதாகும். 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தபோது பல அற்புதங்களைச் செய்தார்.

கானாவூர் என்ற ஊரில் ஒரு திருமண வைபவத்தில் திராட்சப்பழரசம் குறைவுபட்ட போது தண்ணீரை ருசியுள்ள திராட்சரசமாக மாற்றினதே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செய்த முதல் அற்புதமாகும்.

ஒரு சமயம் கலிலேயா கடலில் இயேசுவும் அவருடைய சீடர்களும் படகில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட கொந்தளிப்பையும், சீறி வீசிய காற்றையும் இயேசு கிறிஸ்து அதட்டியபோது மிகுந்த அமைதலுண்டாயிற்று. அதே கடலின் மீது மற்றொரு சமயம் இயேசு கிறிஸ்து நடந்து வந்ததைப் பார்த்து அவருடைய சீடர்கள் ஆச்சரியமடைந்தனர்.

அதே கடலில் சீமோன் பேதுரு என்பவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையின் படி மீன் பிடிப்பதற்காக ஆழத்தில் வலையைப் போட்ட போது ஏராளமான மீன்களைப் பிடித்தான். ஒரு சில அப்பங்களையும், மீன்களையும் கொண்டு ஆயிரக் கணக்கான மக்களுக்கு இரண்டு முறை இயேசு கிறிஸ்து உணவளித்தார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களில் மூன்று முறை மரித்திருந்தவர்களை அவர் உயிரோடு எழுப்பினது இணையற்ற அற்புதங்களாக விளங்குகின்றன. இயற்கையின் மீதும் மரணத்தின் மீதும் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்கு அதிகாரம் உண்டு.

இயேசு கிறிஸ்து தங்கள் வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்கிறார் என்று இன்றும் பலர் சாட்சி பகருகின்றனர். உங்கள் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்ய வல்லவராயிருக்கிறார். உங்களுடைய வாழ்க்கையிலுள்ள பிரச்சனைகள், தேவைகள் அற்புதமாகத் தான் சந்திக்கப்பட முடியும் என்ற நிலையில் அற்புத நாதர் இயேசு கிறிஸ்துவிடம் ஆண்டவராகிய இயேசுவே! என்று ஜெபியுங்கள். அவர் உங்கள் வாழ்க்கையிலும் அற்புதங்களைச் செய்வார்.

எல்லா அற்புதங்களிலும், தலைசிறந்த அற்புதம் பாவத்தோடு பாவக்குழியில் வாழும் மனிதர் விடுதலையாக்கப்பட்டு பரிசுத்தவான்களாக மாற்றப்படுவதுதான்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்தித்த சன்மார்க்கரும்,துன்மார்க்கரும், மூர்க்கமானவர்களும், கோழைகளும், பேராசைக்காரரும் பரிசுத்தவான்களாக மாற்றப்பட்ட பல நிகழ்ச்சிகள் பைபிளில் எழுதப்பட்டுள்ளன. இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டும் தான் பாவிகளை பரிசுத்தவான்களாக மாற்றும் அற்புதத்தை செய்ய வல்லவர். உங்களையும் பரிசுத்தமாக வாழ பலப்படுத்துவார்.



இயேசு கிறிஸ்துவை ஏன் அறிவிக்கிறார்கள்?

இயேசு கிறிஸ்துவை நம்புகிறவர்கள் அவரைப் பற்றி அனைவருக்கும் எடுத்துச் சொல்லுகிறார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தைப் பரப்புகிறார்கள் என்பது பலருடைய அபிப்பிராயம். இயேசு கிறிஸ்துவைப் பற்றி எடுத்துச் சொல்வது மதத்தை வளர்க்க வேண்டும் என்ற மதப்பிரச்சாரம் அல்ல. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்குள் அவரைப் பற்றி எல்லோருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஒரு உள்ளான தூண்டுதல் ஏற்படுகிறது. இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவரைச் சந்தித்து அவரால் ஆசீர்வாதம் பெற்றவர்கள், பாவ மன்னிப்பைப் பெற்று, மாற்றப்பட்டவர்கள் அவரைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்.

தேவைகள் உள்ளவர்களை அவரிடம் கொண்டுவந்தார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து நன்மைகளைப் பெற்றவர்கள் மற்றவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரு பரந்த நோக்கத்தோடுதான் இன்றும் அவரைப் பற்றி பிறருக்கு எடுத்துச் சொல்லு கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரை உத்தமமாய்ப் பின்பற்று கிறவர்கள் அவர் கொடுத்த கடைசிக் கட்டளைக்குக் கீழ்ப்படிய தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த 40 நாட்களுக்குப் பின்னர் பரமேறிச் செல்லுவதற்கு முன்பு தம்முடைய சீடர்களிடம் 'நீங்கள் உலகமெங்கும் சென்று சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்று கட்டளையிட்டார். மாற்கு *16:15*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் ஒரு மனிதனுக்கு மோட்சத்திற்குப் போக வேறு வழியே இல்லை. இவ்வுலக வாழ்விலும் நிறைவான நிலையான ஆசீர்வாதங்களை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே அருளமுடியும். எனவே தான் இயேசு கிறிஸ்துவை அறிந்தவர்கள் மற்றெல்லாரும் அறிந்துகொள்ள வேண்டுமென்று அவரைப் பற்றி அறிவிக்கிறார்கள்.



இயேசு கிறிஸ்து போதித்தது என்ன?

தலைசிறந்த தெய்வீகப் போதகரான இயேசு கிறிஸ்து அதிகாரமுடையவராய்ப் போதித்தார். அன்றாட வாழ்க்கையில் நேர்மையாகவும், பரிசுத்தமாகவும், உள்ளான பக்தியுடனும் அன்புடனும் வாழ்வதற்கான போதனைகளையும் நித்திய வாழ்விற்கு அவசியமான சத்தியங்களையும் அவர் எடுத்துரைத்தார்.

பாவம் செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறான். மனிதனுடைய உள்ளத்திலிருந்து புறப்படுகிற பொல்லாத எண்ணங்களும், தீயசுபாவங்களும் அவனை தீட்டுப் படுத்துகின்றன. வெளிவேஷமாகிய பக்தியினாலும், வெறுமையான பாரம்பரி யங்களினாலும் எந்தப் பயனுமில்லை.

உலகக் காரியங்களுக்காக கவலைப் படத் தேவையில்லை. பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும். உள்ளான பக்திக்கு வெளிப்படையான பலனை பரம பிதா தந்தருளுவார். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் சுயத்தை வெறுக் கிறவர்களாக இருக்க வேண்டும். ஒருவரையொருவர் நேசிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் நிலைத்திருக்க வேண்டும்.

மேலே எழுதப்பட்டிருப்பவைகள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் தெரிந்து எடுக்கப்பட்டு தொகுக்கப்பட்ட ஒரு சில சத்தியங்களே ஆகும். இயேசு நாதரின் போதனைகள் புதிய ஏற்பாட்டிலுள்ள முதல் நான்கு சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தை அடிக்கடி படித்துப் பாருங்கள். மத்தேயு 5,6,7 அதிகாரங்கள், புதிய ஏற்பாட்டில் 6-11 பக்கங்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய போதனைகள்: புதிய ஏற்பாட்டில் பக்கம்

மத்தேயு	24,25	37 - 40
மாற்கு	13	68 - 70
லூக்கா	17,21	108-110,115-117

இயேசு கிறிஸ்துவை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்!

இயேசு கிறிஸ்து என்ற இப்புத்தகத்தில் பல உண்மைகளை நீங்கள் வாசித்து அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அவரையே நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உயரிய உண்மைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொள்ள வேண்டும். இது சரித்திரப்பூர்வமான சில உண்மைகளை மனதளவில் அறிந்து கொள்வதற்கும் மேலானதாகும். நன்றாக வைத்தியம் பார்க்கும் ஒரு டாக்டரின் பெயரை மட்டும் கேள்விப்பட்டிருப்பது அவரைப் பொதுவாகத் தெரிந்திருப்பதாகும்.

ஆனால் அவரிடம் சென்று வைத்தியம் பார்த்தேன். அவர் கொடுத்த சிகிச்சையால் நான் சுகமானேன் என்று நீங்கள் சொல்லுவீர்களல்லவா? அது அவரை நீங்கள் தனிப்பட்ட முறையில் அறிந்திருப்பதாகும்.இயேசு கிறிஸ்துவை . 'ஏதோ ஒரு கடவுள்' என்று மட்டுமல்ல, அவரை உங்கள் சொந்த இரட்சகராக, உங்களை சுகப்படுத்தும் தெய்வீக மருத்துவராக, விடுதலையாக்கும் ஆண்டவராக, உங்களைப் பரிசுத்தப் படுத்தும் பரிசுத்த தேவனாக நீங்கள் கண்டுகொள்வதும், உறவு கொண்டாடு வதும், உரிமை பாராட்டுவதும் தான் நீங்கள் அவரைத் தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொள்வதாகும்.



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறும் பைபிளை அடிக்கடி கருத்துடனும், ஜெபத்துடனும் மீண்டும், மீண்டும் படிக்கும் போது அவரை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். பைபிளின் ஒரு பகுதியாகிய புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைச் சம்பவங்களும், போதனைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார். அவரை சந்திக்க நீங்கள் ஆயத்தமா? உங்களிடத்தில் 'புதிய ஏற்பாடு' என்ற புத்தகம் இருக்கிறதா? உங்களுக்கு புதிய ஏற்பாடு தேவையானால் எங்களுக்கு எழுதுங்கள்.

ஜெபம்!

நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்பினால் கீழ்க்காணும் ஜெபத்தை கருத்தாய் ஏறெடுங்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே! உம்மைத் துதிக்கிறேன். நீர் எனக்காக, என்னுடைய பாவங்களுக்காக, எனக்குப் பதிலாக சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி மரித்தீர். அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிருடன் எழும்பினீர் என்று விசுவாசிக்கிறேன்.

என் மேல் கிருபையாயிரும்; என் பாவங்களை எனக்கு மன்னித்தருளும். ஆண்டவராகிய இயேசுவே! உம்மை என் உள்ளத்தில் இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்கிறேன்.

உம்மை என் முழு இருதயத்தோடும் நேசித்து, விசுவாசித்து பின் பற்றுவேன். என்னை உமக்கு அர்ப்பணிக்கிறேன். ஆண்டவராகிய இயேசுவே! நீர் சீக்கிரம் வரப்போகிறீர் என்று அறிந்திருக்கிறேன். உமக்காகக் காத்திருக்கிறேன். ஆமென்.

இயேசுவே என் தெய்வமே
என் மேல் மனமிரங்கும்
நான் பாவம் செய்தேன்
உம்மை நோகச் செய்தேன்
உம்மைத் தேடாமல்
வாழ்ந்து வந்தேன்
என்னை மன்னியும் தெய்வமே!

இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் கூடுதலாக அறிந்துகொள்ள...

தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒளி பரப்பப்படும் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளைப் பாருங்கள்.

உங்களுக்கு அறிமுகமான கிறிஸ்தவ நண்பர்கள், ஊழியக்காரர்களை சந்தித்து, ஜெபியுங்கள்.

எங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். 8903011350 - உங்களுக்கு யாதொரு பிரச்சனையோ, தேவையோ இருந்தால் எங்களுக்கு எழுதுங்கள்.. உங்களுக்காக ஜெபிக்கிறோம். உங்களுக்கு அறிவுரைகளும் ஆலோசனைகளும் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறோம்.

பின் தொடர்பணி, காந்திநகர் கிழக்கு,

ஒட்டன்சத்திரம் - 624 619

E-mail : selwynde@gmail.com

உங்கள் கவனத்திற்கு!

இயேசு கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் அதிகமாக அறிந்துகொள்ள உதவும்

1. இயேசு கிறிஸ்து
2. மனந்திரும்புங்கள்
3. இயேசுவை நோக்கி
4. பாவம்
5. இயேசு கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார்?
6. அனுதின ஜெபங்கள் - 7
7. இயேசு தங்கும் வீட்டில்

முதலிய புத்தகங்களும் வெவ்வேறு வகையான இலக்கியங்களும் , DVD, ACD களும் எங்களிடத்தில் உண்டு. நீங்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

B.L. 1 Nov - 2019

© Follow-up Ministries Trust, Oddanchatram - 624 619

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

7.உங்களுக்குள் பரிசுத்தத்

தன்மையை உருவாக்குகிறார்

8. உங்கள் நோய்களை

சுகமாக்குவார்.

9. உங்களைப் பிசாசின்

பிடிகளிலிருந்து விடுவிப்பார்.

10. உங்கள் உள்ளத்திலும்,

குடும்பத்திலும் சமாதானம் தருவார்.

11. உங்கள் தேவைகளை

எல்லாம் சந்திப்பார்.

12.ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

வெகு சீக்கிரமாய் வரப் போகிறார்..

இயேசு கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார்?

இவ்வுலகில் நம்முடைய தேவைகளைச் சந்திக்கக்கூடிய நன்மைகளையும் உதவிகளையும் செய்த பலரையும் நாம் அறிவோம். வேறொருவராலும் செய்ய முடியாத மாபெரும் ஒரு உதவியை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்காக செய்திருக்கிறார்.

இயேசு கிறிஸ்து உங்களுக்காக தன்னுடைய உயிரைத் தியாகம் செய்திருக்கிறார். இயேசு கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார் என்பதை அறிந்திருப்பது ஒரு மேலான ஆசீர்வாதத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உதவியாக இருக்கும்.

F.U.L. Series B.L. No.18

பின்தொடர்பணி, காந்திநகர் (கிழக்கு),
ஒட்டன்சத்திரம் - 624 619
✆ 04553 - 240623, 89030 11350
E-mail : selwynde@gmail.com

© Follow-up ministries Trust, Oddanchatram - 624 619
Prinited at: Subhi Printers, Oddanchatram ✆ 9842109368